விளம்பர எண்.248

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## அறிவிக்கை

## கிராம நிர்வாக அலுவலர்

கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு நேரடி நியமனத்திற்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து 20-08 -2010 அன்று மாலை 5.45 மணிவரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | பதவியின் பெயர் மற்றும் பணி குறியீட்டு எண் | காலியிடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்ற முறை |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு அமைச்சுப் பணியில் **'கிராம நிர்வாக அலுவலர்'** (2009-10) (பணிக்குறியீட்டு எண் -050) | 1576 (பதவிக்குறியீட்டு எண். 2025) | ரூ.5,200-20,200 + தரஊதியம் ரூ.2000/- (ச.ப. 1) |
| 2. | தமிழ்நாடு அமைச்சுப் பணியில் **'கிராம நிர்வாக அலுவலர்' (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான குறைவுப் பணியிடங்கள்)** (பணிக்குறியீட்டு எண் -050) | 1077* (பதவிக்குறியீட்டு எண். 2025) | |

- (*வரிசை எண். 2ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான குறைவுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மகளிர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்களுக்கான நியமன ஒதுக்கீடு பொருந்தாது)
- பட்டியல் வகுப்பினர் /பட்டியல் வகுப்பினர் (அருந்ததியர்கள்) மற்றும் பட்டியல் பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் ஒரே ஒரு விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். ( அவ்விண்ணப்பங்கள் கிராம நிர்வாக அலுவலர் பதவி 2009-10-க்கான காலியிடங்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் கிராம நிர்வாக அலுவலர் குறைவுப் பணியிடத்திற்கும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).
- மாவட்டவாரியான காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் பகிர்வு விவரங்கள் அறிவிக்கையில் உள்ள இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### 2. முக்கிய நாட்கள் மற்றும் நேரம்:

| | | நாள் | நேரம் |
|---|---|---|---|
| 1 | **அறிவிக்கை நாள்** | **21 -07-2010** | -- |
| 2 | **விண்ணப்பங்கள் வந்து சேர்வதற்கான கடைசி நாள்** | **20 -08-2010** | **5.45 பி.ப.** |
| 3. | **தேர்வு நாள்** | **பின்னர் அறிவிக்கப்படும்** | |

## 3. வரிசை எண். 1ல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு மட்டும்:

1) விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் (கொள்குறி வகை) பெற்ற மதிப்பெண்களையும், அவர்கள் தெரிவு செய்த மாவட்ட முன்னுரிமை வரிசையினையும் அடிப்படையாகக் கொண்டும், இனச் சுழற்சி முறையினைப் பின்பற்றியும் அதாவது பட்டியல் வகுப்பினர் /பட்டியல் வகுப்பினர் (அருந்ததியர்கள் முன்னுரிமை வரிசைப்படி) மற்றும் பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கான 5% இடஒதுக்கீடு ஆகியவைகளைப் பின்பற்றியும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனியாக தெரிவு செய்யப்படுவர். எனினும் விண்ணப்பதாரரின் படிநிலைப்பட்டியலில் (Ranking list) உள்ள நிலை, காலிப்பணியிட நிலை மற்றும் பணி நியமன ஒதுக்கீட்டு விதி ஆகியவற்றைப் பொருத்து அவரை எந்தவொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு.

2) பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட 30% இடஒதுக்கீட்டில் 10% இடங்கள் ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கப்படும். (மேலும் விவரங்களுக்கு தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 4-ன் கீழுள்ள குறிப்பு மற்றும் பத்தி 6-ஐ காண்க.)

3) அரசு ஆணை (டி) எண்.5 வருவாய் (பணி 7-1) துறை நாள் 08.01.2007ன்படி மாற்றுத்திறனாளிகளில் 40% முதல் 50% வரை (கை, கால்) (Orthopaedically Handicapped) இயக்கத்தில் குறை உள்ளவர்களில் எழுதுவதில் எந்த விதத் தடையுமில்லாதவர்கள் மற்றும் உடல் இயக்கத்தில் குறைந்த அளவு இயலாமை உள்ளவர்களுக்கு மட்டும் காலிப்பணியிடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட 3% இடஒதுக்கீடு செய்யப்படும்.

4) பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்களில் அவ்விடங்களுக்காக தெரிவு செய்ய தகுதிவாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில் அப்பணியிடங்கள் அதே வகுப்பைச் சார்ந்த தகுதிவாய்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

5) பட்டியல் வகுப்பினர் (அருந்ததியர்கள்) முன்னுரிமை வரிசை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பப்பட்ட பிறகும், (அவ்வகுப்பினர்களில்) தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவ்விண்ணப்பதாராகள், பட்டியல் வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டிலும் தகுதியின் அடிப்படையில் நிரப்பப்படுவர். பட்டியல் வகுப்பினர் அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அப்பணியிடங்கள் பட்டியல் வகுப்பைச் சார்ந்த அதாவது பட்டியல் வகுப்பினர் (அருந்ததியர்கள்)ளைத் தவிர தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

## 4. பொதுவான தகவல்கள்:

அ. மேலே பத்தி 3 - ல் உள்ள பணிநியமன ஒதுக்கீடு மற்றும் அறிவுரைகள் யாவும் வரிசை எண். 1 ல் உள்ள 1576 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான காலிப்பணியிடத்திற்கு மட்டுமே பொருந்தும்.

ஆ. விளம்பரப்படுத்தப்படும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவு நடப்பதற்கு முன்போ அல்லது நடக்கும் போதோ, காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்கு உட்பட்டதாகும்.

இ. பெண்கள் ஆதரவற்ற விதவை, மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு வ.எண்.1ல் உள்ள 1576 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான காலிப்பணியிடங்களில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீடு வழங்கப்படும்.

ஈ. **உடற்தகுதிச் சான்றிதழ்**: இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணி, தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணி மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள உரிய படிவத்தில் உடற்தகுதிச் சான்றிதழைப் பெற்று வழங்கவேண்டும். இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பார்வையின் தரம் - III அல்லது அதற்கு மேம்பட்ட தரம் ஆகும். ( Standard –III or Better)

உ. மாற்றுத் திறனாளிகளை பொறுத்தவரையில் உடல் ஊனத்தின் இயல்பையும் இயலாமையின் அளவையும் குறிப்பிட்டு அத்தகைய உடல் ஊனம் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிக்கான பணிகளை திறம்படச் செய்வதற்கு தடையாக இருக்காது என்று மருத்துவ அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

ஊ. **பணப் பிணையம்** : இப்பதவியில் பணியமர்த்தப்படும் ஒவ்வொருவரும் அவர் பணியில் சேரும் நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பணப்பிணையமாக ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலுத்த வேண்டும்.

- ➢ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் ஆகியோர் பணியில் சேரும் நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பணப் பிணையமாக ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) செலுத்த வேண்டும்.
- ➢ பட்டியல் வகுப்பினர்/பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்கள்) மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆகியோர் பணப்பிணையம் ஏதும் செலுத்தத் தேவையில்லை.
- ➢ மேற்குறிப்பிட்டுள்ளவாறு பணப்பிணையம் செலுத்தத் தவறினால் அந்நபர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

எ. தெரிவு குறித்து எழுப்பப்படும் எந்தவொரு கோரிக்கையும் தெரிவு முடிவுகள் வெளியிடப்பட்ட 90 நாள்களுக்குள் தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். அதற்கு பின்னர் பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் கவனிக்கப்படமாட்டாது.

ஏ. **நியமனத்திற்குப் பின் இருப்பிடம்** :
இப்பதவியில் பணியமர்த்தப்படும் ஒவ்வொருவரும் அவர் பதவிப் பொறுப்பிலிருக்கும் கிராமத்தில் அவர் அப்பதவியில் பொறுப்பிலிருக்கும் காலம் வரை தொடர்ந்து வசிக்க வேண்டும்.

**5. <u>தகுதிகள்:</u>** (அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும்)

அ. வயது: (01.07.2010 அன்று)

**குறைந்தபட்ச வயது**: "அனைத்து தரப்பினரும்"
21 வயதினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
(1.7.1989 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பிறந்திருத்தல் வேண்டும்.

**அதிகபட்ச வயது** :
(i) பட்டியல் வகுப்பினர்/பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்கள்) மற்றும் பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோர் 40 வயதினை நிறைவு செய்யாமல் இருத்தல் வேண்டும்.
(2.7.1970 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்திருத்தல் வேண்டும்)
(ii) "ஏனையோர்" 30 வயதினை நிறைவு செய்யாமல் இருத்தல் வேண்டும். (2.7.1980 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்திருத்தல் வேண்டும்.)

<u>குறிப்பு :</u>

(i) அரசு ஆணைப்படி நேரடி நியமனத் தடையாணையால் பாதிக்கப்பட்ட வேலையில்லா இளைஞர்களுக்கும் அரசுப்பணியில் இருப்பவர்களுக்கும் உச்ச வயது வரம்பில் 5 ஆண்டுகள் சலுகை அளிக்கப்படும்.

(ii) தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில் பத்தி 4ல் உள்ளவை இத் தெரிவிற்குப் பொருந்தாது.

(iii) தேர்வாணையத்தின் 'விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்' பத்தி 13 மற்றும் 14ல் அறிவிக்கப்பட்டுள்ள வயது வரம்புச் சலுகை உச்ச வயது வரம்பிற்கு மட்டும் பொருந்தும்.

(iv) பட்டியல் வகுப்பினர்/பட்டியல் வகுப்பினர் (அருந்ததியாகள்) மற்றும் பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்)-ஐ தவிர ஏனையோர் மாநில அல்லது மத்திய அரசுப்பணியில் ஐந்தாண்டுகள் முறையான பணியில் இருப்பின், விதிமுறைகளில் கூறப்பட்டுள்ள வயது வரம்பிற்கு உட்பட்டிருந்தாலும் கூட விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவார்கள்.

(v) டான்சி நிறுவனத்தில் பணிபுரிந்து ஆட்குறைப்பிற்கு உள்ளான தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் தொழில் நுட்பம் சாராத பணியாளர்கள் அரசுக் கழகங்கள் மற்றும் அரசின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் பணியிலமர்த்தப்படாதவர்களாக இருப்பின் வயது வரம்பு தவிர எல்லா கல்வித் தகுதிகளும் இருக்கும்பட்சத்தில் இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு விண்ணப்பிக்கலாம் (சான்று சமர்ப்பிக்க வேண்டும்) இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விதிமுறைகளில் உள்ள வயது வரம்பு இவர்களுக்கு சாதகமாக அரசால் தளர்த்தப்படும்.

(மேலும் சலுகைகள் தொடர்பான விவரங்களுக்கு தேர்வாணையத்தின் 'விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளைக் காண்க.)

## ஆ. கல்வித் தகுதி:

அறிவிக்கை நாளன்று (21-07-2010) விண்ணப்பதாரர்கள் பின்வரும் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி அல்லது அதற்குச் சமமான கல்வித் தகுதியினை பெற்றிருத்தல் வேண்டும்.

"குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி அதாவது பள்ளியிறுதி வகுப்பில் (பத்தாம் வகுப்பு) (அ) அதற்கு சமமான கல்வித்தகுதியில் தேர்ச்சி பெற்று மேல்நிலைப்பள்ளிக் கல்வி அல்லது கல்லூரிக் கல்வி படிப்பில் சேர்வதற்கான தகுதி பெற்றிருத்தல் வேண்டும்'."

( சமமான கல்வித் தகுதி தொடர்பாக விண்ணப்பதாரர்களால் எழுப்பப்படும் கோரிக்கைக்கு அதற்கான சான்றிதழை இணைக்க வேண்டும் )

<u>குறிப்பு:</u>

(1) பள்ளியிறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) அல்லது அதற்குச் சமமான கல்வித்தகுதியில் தேர்ச்சி பெறாதவர்கள் அதற்கு மேம்பட்ட கல்வித்தகுதி பெற்றிருப்பினும் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்,

(2) மேலே குறிப்பிட்டுள்ளவாறு (கல்வித் தகுதிக்கான) நகல் சான்றிதழ்களை விண்ணப்பப்படிவத்தோடு சேர்த்து அனுப்பத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## இ. தமிழ் மொழியில் தகுதி:

விண்ணப்பதாரர்கள் தமிழில் போதிய அறிவு பெற்றிருத்தல் வேண்டும்; அதாவது

(i) பள்ளியிறுதித் தேர்வில் தமிழை ஒரு மொழியாக எடுத்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு பள்ளியிறுதி வகுப்பு பொதுத்தேர்வை தமிழில் எழுதி தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெறும் துறைத் தேர்வுகளில் ஒன்றான இரண்டாம் நிலை தமிழ் மொழித் தேர்வில் ( முழுத் தேர்வு ) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு:**

தமிழ் மொழியில் போதுமான தமிழறிவு பெறாதவர்களும் விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்பட்டால் பணி நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்குள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலை தமிழ் மொழித் தேர்வை ( முழுத் தேர்வு ) தமிழில் எழுதி தேர்ச்சி பெறவேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறாவிடில் பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.

**6. எழுத்துத் தேர்விற்கான திட்டம் (பள்ளியிறுதித் தேர்வின் தரம் (கொள்குறி வகை):**

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| ஒரே தாளில் பொது அறிவு (பத்தாம் வகுப்பு தரம்) - 100 வினாக்கள் + பொதுத் தமிழ் / பொது ஆங்கிலம் (பத்தாம் வகுப்பு தரம்) – 100 வினாக்கள் | 3 மணி நேரம் | (150+150)= 300 | 90 |

**குறிப்பு :**

(1) வினாத்தாள் இரண்டு மாதிரிகளைக் கொண்டது அதாவது 1) பொது அறிவு வினாக்கள் (100 வகைகள்) மற்றும் பொதுத் தமிழ் வினாக்கள் (100 வகைகள்) மற்றும் 2) பொது அறிவு வினாக்கள் (100 வகைகள்) மற்றும் பொது ஆங்கிலம் வினாக்கள் (100 வகைகள்), விண்ணப்பதாரர்கள், முதல் 100 வினாக்களுக்கு பொது அறிவுத் தேர்விலும், அடுத்த 100 வினாக்களுக்கு பொதுத் தமிழிலோ அல்லது பொது ஆங்கிலத்திலோ பதிலளிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவத்தின் கலம் 22-ல் கட்டாயப்பாடம் என்ற தலைப்பின் கீழ் உள்ள கட்டத்தில் தங்கள் விருப்பத்தை அதாவது பொதுத் தமிழில் எழுதுகிறாரா அல்லது பொது ஆங்கிலத்தில் எழுதுகிறாரா எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் கலம் 22 நிரப்பப்படாத விண்ணப்பங்கள் தண்டனைக்குள்ளாக்கப்படும்.

(2) பொது அறிவு வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும், பொதுத்தமிழ் வினாத்தாள் தமிழிலும், பொது ஆங்கில வினாத்தாள் ஆங்கிலத்திலும் இருக்கும்.

எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் பின்வரும் செய்தி அறிவிப்பு எண்களில் வெளியிடப்பட்டுள்ளது.

| பொருள் | பக்கம் எண் | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் செய்தி அறிவிப்பு எண். மற்றும் நாள் |
|---|---|---|
| பொது அறிவு (பத்தாம் வகுப்பு தரம்) | 490 | எண் 16, நாள் 01.08.2004 |
| பொதுத் தமிழ் (பத்தாம் வகுப்பு தரம்) | 721 | எண் 11, நாள் 16.05.2001 |
| பொது ஆங்கிலம் (பத்தாம் வகுப்பு தரம்) | 722 | எண் 11, நாள் 16.05.2001 |

எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இணையதள முகவரியில் காணலாம். “www.tnpsc.gov.in”

**7. <u>எழுத்துத் தேர்விற்கான தேர்வு மையங்கள்</u> :**

தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான தகவல் சிற்றேடு பக்கம் 17-ல் பிற்சேர்க்கை 1-ல் உள்ள (A, B, C, D & E) யில் குறிப்பிட்டுள்ள தேர்வு மையங்களில் தேர்வு நடைபெறும்.

**<u>குறிப்பு:</u>**

அ. விண்ணப்பதாரர்கள் தேர்வு மையங்களில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்து தேர்வு எழுத வேண்டும்.

ஆ. விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விற்கு தங்களது சொந்த செலவில் சென்று தேர்வு எழுத வேண்டும்.

இ. தேர்வு மையத்தை மாற்றக் கோரும் கோரிக்கைகள் தேர்வாணையத்தால் ஏற்கப்படமாட்டாது.

ஈ. தேர்வு மையங்களின் எண்ணிக்கையை குறைக்கவோ அல்லது அதிகரிக்கவோ மேலும் விண்ணப்பதாரர்களை அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலுள்ள தேர்வு மையங்களுக்கு மறு ஒதுக்கீடு செய்யவோ தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

**8. <u>தெரிவு செய்யும் முறை</u>:**

விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் அவர்கள் அளிக்கும் மாவட்டங்களின் முன்னுரிமை வரிசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். (மாவட்ட முன்னுரிமை அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கும் போது பெற்றுக் கொள்ளப்படும்) (பணியிட ஒதுக்கீட்டு விதிமுறை 1576 கிராம நிர்வாக அலுவலர் காலிப்பணியிடங்களுக்கு மட்டும் பின்பற்றப்படும்).

**9. <u>தேர்வுக் கட்டணம்</u>: ரூ. 75/- ( ரூபாய் எழுபத்தைந்து மட்டும்)**

தேர்வுக் கட்டணம் , தகவல் சிற்றேட்டின் பிற்சேர்க்கை -3-ல் பட்டியலிடப்பட்டுள்ள அஞ்சலகங்களில் ஏதேனும் ஒரு அஞ்சலகத்தின் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். கட்டணம் செலுத்தியதற்காகப் பெறப்பட்ட அஞ்சலகப் பற்றுச் சீட்டை விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டப்படவேண்டும். அஞ்சலகப் பற்றுச் சீட்டு இப்பதவிக்கான விளம்பரம் நாளேடுகளில் வெளியிடப்பட்ட தேதியிலோ அல்லது அதற்குப் பின்னரோ பெறப்பட்டிருக்க வேண்டும்.

(மேலும் விவரங்களுக்கு தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான தகவல் சிற்றேட்டின் பகுதி-III ல் பத்தி-2 மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 12-ஐ காண்க).

மாற்றுத் திறனாளிகள் (அவர்களது குடும்ப வருமானம் எவ்வளவு இருப்பினும்) மற்றும் ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. (மாற்றுத்திறனாளிகள் / ஆதரவற்ற விதவைகள் என்பதற்கான சான்றிதழ்களின் நகல்கள் விண்ணப்பபடிவத்தோடு இணைத்தனுப்பப்பட வேண்டும்).

**10. <u>விண்ணப்பப்படிவத்தோடு இணைத்தனுப்பும் இணைப்பின் நகல்கள் :</u>**

அ) விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தேவையான சான்றிதழ்களின் நகல்களுடன் (கல்வித் தகுதிச் சான்றிதழுடன்) தேர்வாணைய விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 15-ல் குறிப்பிட்டுள்ளபடியும் மற்றும் தகவல் சிற்றேடு கலம் 26 பகுதி-II-ல் குறிப்பிட்டுள்ளபடியும் ரூ.75/- ( ரூபாய் எழுபத்தைந்து மட்டும்)க்கான அஞ்சலகப் பற்றுச் சீட்டை

அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி விண்ணப்பப்படிவத்ததை அனுப்ப வேண்டும் (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு கோரப்படாமலிருந்தால்).

ஆ) விண்ணப்பதாரர்கள் தங்களின் அசல் சான்றிதழ்களை விண்ணப்பப்படிவத்தோடு சேர்த்து அனுப்பத் தேவையில்லை.

இ) இணையதளம் மூலம் விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள் இவ்வறிவிக்கையின் பத்தி -13(ஈ)ல் உள்ள அறிவுரைகளைக் காண்க.

(தேவையான சான்றொப்பமிட்ட சான்றிதழ்களின் நகல்களுடன் அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். )

## 11. தடையின்மைச் சான்றிதழ்:

தேர்வாணையத்தின் " விண்ணப்பதாராகளுக்கான விதிமுறைகள்" பத்தி 15ல் உள்ள விதிமுறைகளைக் காண்க.

## 12.சலுகைகள்:

பட்டியல் வகுப்பினர்/பட்டியல் வகுப்பினர் (அருந்ததியர்கள்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்), ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகள், பிணைத் தொழிலாளிகள் அவர்தம் மகன்கள் மற்றும் மணமாகாத மகள்களும் மற்றும் தமிழ் நாடு அரசின் தற்காலிக பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் அப்பணியில் தொடர்ந்து நீடிப்பவர்கள் ஆகியவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வயது வரம்பு மற்றும்/அல்லது கட்டணம் ஆகியவற்றிற்கான சலுகைகள் தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில் அறிவிக்கப்பட்டுள்ளன.

## 13. விண்ணப்பப்படிவங்கள் வழங்கல் :

அ. விண்ணப்பப்படிவத்தினை அதனை நிரப்பும் முறையைத் தெரிவிக்கும் அறிவுரைகள் கொண்ட ஒரு தகவல் சிற்றேடு, தேர்வாணைய விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் விண்ணப்பத்தினை (தேர்வாணைய அலுவலகத்திற்கு) அனுப்புவதற்கான ஒரு உறை ஆகியவற்றுடன் தமிழ்நாட்டின் அனைத்துத் தலைமை/ துணை அஞ்சலகங்களிலும் மற்றும் புதுச்சேரி தலைமை அஞ்சலகத்திலும், ரூ 30/- (ரூபாய் முப்பது மட்டும்) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். (அஞ்சலகங்களின் பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in என்ற முகவரியில் கொடுக்கப்பட்டுள்ளது).

ஆ. விண்ணப்பபடிவத்தை, **எண்.1, கீரிம்ஸ் சாலை, சென்னை - 600 006-**ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தின் விற்பனைப் பிரிவில் அனைத்து வேலை நாள்களிலும் மற்றும் விண்ணப்பம் வந்து சேருவதற்கான கடைசி நாளன்று மாலை 5.00 மணிவரை (மதிய உணவு இடைவேளை தவிர) ரூ.30/- ஐ (ரூபாய் முப்பது மட்டும்) நேரடியாக செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். **விண்ணப்பபடிவங்கள் தபால் மூலமாக அனுப்பப்படமாட்டாது**.

இ. மேலே கூறியுள்ளபடி பெறப்பட்ட OMR அல்லது இணையதளத்தின் மூலமாகவோ பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை மட்டுமே பயன்படுத்த வேண்டும். தட்டச்சு செய்யப்பட்டதும், அச்சிடப்பட்டதும், ஒளிநகலிடப்பட்டதும் அல்லது புகைப்பட நகல் எடுக்கப்பட்டதுமான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஈ. **இணையதளம் மூலமாக விண்ணப்பித்தல்**:

விண்ணப்பதாரர்கள் ‘ஆன்லைன்’ விண்ணப்பத்தினை தேர்வாணையத்தின் இணையதளமான “www.tnpsc.gov.in” மூலமாக விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் மூலமாக விண்ணப்பத்தினை பதிவு செய்யும் முன் ரூ105/-க்கான (விண்ணப்பக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் ரூ30+75=ரூ105/-) அஞ்சலகப் பற்றுச் சீட்டை தகவல் சிற்றேட்டின் பிற்சேர்க்கை -IIIல் பட்டியலிடப்பட்டுள்ள அஞ்சலகங்களில் ஏதேனும் ஒரு அஞ்சலகத்தில் பெற்றிருத்தல் வேண்டும். தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு கோருபவர்கள் விண்ணப்பக்கட்டணத்திற்குரிய ரூ.30/- (ரூபாய் முப்பது மட்டும்)க்கான அஞ்சலகப் பற்றுச் சீட்டு பெற்றிருத்தல் வேண்டும். அஞ்சலகப் பற்றுச் சீட்டை விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்ட வேண்டும். ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கும் இவ்வறிவிக்கை/ விளம்பரத்தில் விண்ணப்பதாரர்களுக்கென கூறப்பட்டுள்ள விதிமுறைகள் தகவல் சிற்றேட்டில் உள்ள அறிவுரைகள் பொருந்தும். ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் தேவையான சான்றிதழ்களின் நகல்களையும் சேர்த்து (சான்றொப்பமிடப்பட்டது) அஞ்சலகப் பற்றுச்சீட்டு அதற்கான இடத்தில் ஒட்டப்பட்டு விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாளுக்குள் தேர்வாணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். கடைசி நாளுக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ‘ஆன்லைன் ‘ வாயிலாக விண்ணப்பிக்கும் வசதியானது 18-08- 2010 அன்று மாலை 5.15 மணிக்கு நிறுத்தப்படும்.

## 14. விண்ணப்பங்களை அனுப்பும் முறை:

அ. விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தேர்வாணையத்திற்கு அனுப்புவதற்கு முன்னர் கீழ்கண்ட அறிவுரைகளை பின்பற்றப்படவேண்டும்.

(i) விண்ணப்பதாராகள் உறுதி மொழிக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் பந்து முனை/ எழுதுகோலினால் மட்டுமே கையொப்பமிடப்பட்டிருத்தல்வேண்டும். கையொப்பமிடத் தவறிய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பதாரர்கள் திருத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் கலங்கள் 1, 1(a), 3, 4, 14 (b), 14(c), 14(d), மற்றும் கட்டாயப்பாடம் (கலம் 22)-ல் ஆகியவற்றை இவ்வறிவிக்கையில் காணப்படும் விவரங்களுக்கு இணங்க நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரர்கள், திருத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் உள்ள கலங்கள் 23, 23(a) மற்றும் 23(c)ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளவாறு தண்டிக்கப்பட்டிருந்தாலோ அல்லது கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தாலோ அதன் விவரங்களை கண்டிப்பாக அவற்றில் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆ. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தேவையான சான்றிதழ்களின் நகல்களுடன் **தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண்.1, கிரீம்ஸ் சாலை, சென்னை - 600 006** என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி நாளான 20-08-2010 அன்று மாலை 5.45 மணிக்குள்ளாகவோ அல்லது அதற்கு முன்பாகவோ தேர்வாணைய அலுவலகத்தால் பெறப்படும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

செயலாளர்.

இணைப்பு

# DISTRIBUTION OF VACANCIES FOR THE POST OF V.A.O.

| SL NO | UNIT / DEPARTMENT | | GT | | | | | | BC | | | | | | BCM | | | | | MBC/DC | | | | | | SC | | | | | | ST | SCA | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | VACANCIES | GTG | GTW | GTDW | GTEX | GTG_ORTHO | GTW_ORTHO | BCG | BCW | BCDW | BCEX | BCG_ORTHO | BCW_ORTHO | BCMG | BCMW | BCMDW | BCMG_ORTHO | BCMW_ORTHO | MBC/DCG | MBC/DCW | MBC/DCDW | MBC/DCEX | MBC/DCG_ORTHO | MBC/DCW_ORTHO | SCG | SCW | SCDW | SCEX | SCG_ORTHO | SCW_ORTHO | STG | SCAG | SCAW | SCADW | SCAG_ORTHO | SCAW_ORTHO | Shortfall of SC vacancies | SC (15% out of 18%) | SC (3% out of 18%) | Shortfall of ST vacancies |
| 1 | ARIYALUR | 15 | 3 | -- | 1 | -- | -- | -- | 3 | -- | 1 | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | 2 | -- | 1 | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 27 | 23 | 5 | 2 |
| 2 | CHENNAI | 1 | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 0 | 0 |
| 3 | COIMBATORE | 17 | 2 | -- | 1 | -- | -- | 1 | 3 | -- | 1 | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | 3 | -- | 1 | -- | -- | -- | 2 | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 20 | 17 | 3 | 3 |
| 4 | CUDDALORE | 53 | 9 | 4 | 1 | 1 | 1 | -- | 8 | 3 | 1 | 1 | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 7 | 2 | 1 | 1 | -- | -- | 4 | 2 | 1 | -- | 1 | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 51 | 43 | 9 | 5 |
| 5 | DHARMAPURI | 32 | 6 | 2 | 1 | 1 | -- | -- | 5 | 2 | 1 | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | 3 | 1 | 1 | -- | 1 | -- | 3 | 1 | 1 | -- | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 0 | 0 | 0 | 0 |
| 6 | DINDIGUL | 20 | 3 | 1 | 1 | -- | -- | -- | 3 | 1 | 1 | -- | 1 | -- | 1 | -- | -- | -- | -- | 3 | -- | 1 | -- | -- | -- | 2 | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 8 | 7 | 1 | 3 |
| 7 | ERODE | 48 | 8 | 4 | 1 | 1 | 1 | -- | 7 | 3 | 1 | 1 | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 6 | 2 | 1 | 1 | -- | -- | 5 | 1 | 1 | -- | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 33 | 28 | 6 | 2 |
| 8 | KANCHEEPURAM | 16 | 3 | -- | 1 | -- | -- | -- | 3 | -- | 1 | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | 2 | -- | 1 | -- | -- | -- | 1 | -- | 1 | -- | 1 | -- | -- | -- | -- | 1 | -- | -- | 38 | 32 | 6 | 7 |
| 9 | KANYAKUMARI | 11 | 3 | -- | 1 | -- | -- | -- | 2 | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 0 | 0 | 0 | 0 |
| 10 | KARUR | 12 | 3 | -- | 1 | -- | -- | -- | 2 | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 29 | 24 | 5 | 2 |
| 11 | KRISHNAGIRI | 54 | 10 | 4 | 1 | 1 | -- | -- | 9 | 3 | 1 | 1 | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 5 | 2 | 1 | 1 | 2 | -- | 5 | 2 | 1 | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 29 | 24 | 5 | 3 |
| 12 | MADURAI | 36 | 7 | 2 | 1 | 1 | -- | -- | 6 | 2 | 1 | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | 5 | 1 | 1 | -- | -- | -- | 3 | 1 | 1 | -- | 1 | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 39 | 33 | 7 | 4 |
| 13 | NAGAPATTINAM | 113 | 22 | 9 | 2 | 2 | -- | -- | 17 | 8 | 1 | 1 | 2 | -- | 3 | -- | 1 | -- | -- | 14 | 6 | 1 | 1 | 1 | -- | 11 | 4 | 1 | 1 | -- | -- | 1 | 2 | 1 | 1 | -- | -- | 32 | 27 | 5 | 4 |
| 14 | NAMAKKAL | 28 | 6 | 1 | 1 | -- | -- | -- | 4 | 1 | 1 | -- | 1 | -- | 1 | -- | -- | -- | -- | 4 | 1 | 1 | -- | -- | -- | 3 | 1 | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 38 | 32 | 6 | 4 |
| 15 | PERAMBALUR | 26 | 5 | 1 | 1 | -- | 1 | -- | 5 | 1 | 1 | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | 3 | 1 | 1 | -- | -- | -- | 3 | 0 | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 11 | 9 | 2 | 1 |
| 16 | PUDUKKOTTAI | 91 | 17 | 7 | 1 | 1 | 1 | -- | 16 | 6 | 1 | 1 | -- | -- | 2 | -- | 1 | -- | -- | 12 | 4 | 1 | 1 | -- | -- | 9 | 2 | 1 | 1 | -- | 2 | 1 | 2 | -- | 1 | -- | -- | 31 | 26 | 5 | 4 |
| 17 | RAMANATHAPURAM | 58 | 10 | 4 | 1 | 1 | 1 | -- | 9 | 3 | 1 | 1 | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 7 | 3 | 1 | 1 | -- | -- | 6 | 2 | 1 | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 23 | 19 | 4 | 4 |
| 18 | SALEM | 40 | 7 | 3 | 1 | 1 | -- | -- | 5 | 2 | 1 | 1 | 1 | -- | 1 | -- | 1 | -- | -- | 6 | 1 | 1 | -- | -- | -- | 4 | 1 | 1 | -- | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 2 | 2 | 0 | 1 |
| 19 | SIVAGANGA | 43 | 8 | 3 | 1 | 1 | -- | -- | 6 | 2 | 1 | 1 | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 6 | 1 | 1 | -- | -- | 1 | 5 | 1 | 1 | -- | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 39 | 33 | 7 | 4 |
| 20 | THANJAVUR | 108 | 19 | 9 | 1 | 2 | 2 | -- | 18 | 8 | 1 | 1 | -- | -- | 3 | -- | 1 | -- | -- | 14 | 6 | 1 | 1 | -- | -- | 9 | 4 | 1 | 1 | 1 | -- | 1 | 2 | 1 | 1 | -- | -- | 67 | 56 | 11 | 7 |
| 21 | THE NILGIRIS | 4 | 1 | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 10 | 8 | 2 | 1 |
| 22 | THENI | 10 | 2 | -- | 1 | -- | -- | -- | 2 | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 11 | 9 | 2 | 1 |
| 23 | THOOTHUKKUDI | 67 | 13 | 3 | 1 | 1 | -- | 2 | 11 | 4 | 1 | 1 | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 9 | 3 | 1 | 1 | -- | -- | 6 | 2 | 1 | 1 | -- | -- | 1 | 2 | -- | 1 | -- | -- | 31 | 26 | 5 | 4 |
| 24 | TIRUCHIRAPPALLI | 97 | 19 | 8 | 1 | 1 | -- | -- | 16 | 5 | 1 | 1 | 1 | 2 | 2 | -- | 1 | -- | -- | 13 | 5 | 1 | 1 | -- | -- | 9 | 4 | 1 | 1 | -- | -- | 1 | 2 | -- | 1 | -- | -- | 38 | 32 | 6 | 4 |
| 25 | TIRUNELVELI | 41 | 8 | 3 | 1 | 1 | -- | -- | 6 | 2 | 1 | 1 | -- | -- | 0 | -- | 1 | 1 | -- | 6 | 1 | 1 | -- | -- | -- | 4 | 1 | 1 | -- | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 22 | 18 | 4 | 3 |
| 26 | THIRUPPUR | 46 | 9 | 2 | 1 | 1 | -- | 1 | 7 | 2 | 1 | 1 | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 6 | 2 | 1 | 1 | -- | -- | 5 | 1 | 1 | -- | -- | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 29 | 24 | 5 | 3 |
| 27 | THIRUVALLUR | 39 | 7 | 3 | 1 | 1 | -- | -- | 6 | 2 | 1 | 1 | -- | -- | 1 | -- | -- | -- | -- | 6 | 1 | 1 | -- | -- | -- | 4 | 0 | 1 | -- | -- | 1 | -- | 1 | -- | 1 | -- | -- | 55 | 46 | 9 | 6 |
| 28 | THIRUVANNAMALAI | 65 | 12 | 5 | 1 | 1 | 1 | -- | 11 | 4 | 1 | 1 | -- | -- | 1 | -- | 1 | -- | -- | 8 | 3 | 1 | 1 | -- | -- | 5 | 2 | 1 | 1 | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | -- | 66 | 55 | 11 | 4 |
| 29 | TIRUVARUR | 103 | 19 | 8 | 1 | 2 | 1 | 1 | 17 | 7 | 1 | 1 | -- | -- | 3 | -- | 1 | -- | -- | 13 | 5 | 1 | 1 | 1 | -- | 9 | 4 | 1 | 1 | -- | -- | 1 | 2 | 1 | 1 | -- | -- | 40 | 33 | 7 | 5 |
| 30 | VELLORE | 127 | 25 | 10 | 2 | 2 | -- | -- | 19 | 9 | 1 | 2 | 2 | -- | 3 | -- | 1 | -- | -- | 16 | 6 | 1 | 1 | 1 | 1 | 13 | 5 | 1 | 1 | -- | -- | 1 | 2 | 1 | 1 | -- | -- | 56 | 47 | 9 | 5 |
| 31 | VILLUPURAM | 130 | 24 | 10 | 2 | 2 | 2 | -- | 22 | 9 | 1 | 2 | -- | -- | 3 | 1 | 1 | -- | -- | 16 | 7 | 1 | 1 | 1 | -- | 12 | 5 | 1 | 1 | 1 | -- | 1 | 2 | 1 | 1 | -- | -- | 70 | 58 | 12 | 9 |
| 32 | VIRUDHUNAGAR | 25 | 5 | 1 | 1 | -- | -- | -- | 5 | -- | 1 | -- | -- | 1 | 1 | -- | -- | -- | -- | 3 | 1 | 1 | -- | -- | -- | 3 | -- | 1 | -- | -- | -- | -- | -- | -- | 1 | -- | -- | 22 | 18 | 4 | 4 |
| | Total | **1576** | **296** | **107** | **33** | **25** | **11** | **5** | **254** | **89** | **30** | **20** | **8** | **4** | **38** | **1** | **17** | **1** | -- | **202** | **65** | **30** | **14** | **7** | **2** | **149** | **46** | **28** | **9** | **5** | **3** | **12** | **28** | **5** | **31** | **1** | -- | **968** | **807** | **161** | **109** |